# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர்: **தங்கவேல்** நாள்: 01.03.2024

வா.சா.1 – 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.40</u>

கடந்த 13.07.2023 ம் தேதியன்று 5 ம் பிரதிவாதி அமைத்திருந்த கம்பி வேலியை அறுத்து சேதப்படுத்தியதாக ஒரு புகார் மனு என்மீதும் மற்ற வாதிகள் மீதும் தேவூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, அது புகார் 124/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் நானும் மற்ற வாதிகளும் கைது செய்யப்படாமல் இருக்க முன் ஜாமீன் பெற்றிருந்தோம் என்றால், சரிதான். மேற்படி புகாரின் அடிப்படையில் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆகையால் வாதிகள்தான் சட்டத்தை மீறி நடந்து கொள்ளும் நபர்கள் என்றாலும், பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னாலும், சரியல்ல. 5 ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களான சர்வே எண் 94/13C மற்றும் 94/20 ல் தனது பெயரை சேர்க்க மனு அளித்து, அம்மனுவானது வா.த.சா.ஆ.67 ன்படி வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால், சரிதான்.

2) வா.த.சா.ஆ.67 ஆவணப்படியான உத்தரவு எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் நான் தாக்கல் செய்த சீராய்வு மனு வா.த.சா.ஆ.71 ன்படி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். வா.த.சா.ஆ.71 ஆவணப்படியான உத்தரவு எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவும் இல்லை, அவ்வாறு மேல்முறையீடு செய்துள்ளதாக குறிப்பிட்டு கூடுதல் முதன்மை சாட்சியத்திலும் கூறவில்லை என்றால், சரிதான். மேல்முறையீடு எதுவும் செய்யாமல், வழக்கிற்காக மேல்முறையீடு செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வா.த.சா.ஆ.53 ஆவணம் 01.03.2023 ம் தேதியில் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.த.சா.ஆ.67, வா.த.சா.ஆ.71 ஆவணப்படியான உத்தரவுகள் கடந்த

03.09.2018 மற்றும் 05.03.2020 ம் தேதியிலும் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். 5 ம் பிரதிவாதியின் பெயர் வழக்கு சர்வே எண் 94/13C மற்றும் 94/20 ல் பெயர் சேர்க்கப்பட்டதை மறைத்துதான் வா.த.சா.ஆ.52 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

3) கூடுதல் முதன்மை சாட்சியத்தில் வா.த.சா.ஆ.67 மற்றும் வா.த.சா.ஆ.71 ஆவணப்படி 5 ம் பிரதிவாதியின் பெயர் வழக்கு சர்வே எண் 94/13C மற்றும் 94/20 ல் பெயர் சேர்க்கப்பட்டதை குறிப்பிட்டு கூறவில்லையென்றால், சரிதான். வா.த.சா.ஆ.67 மற்றும் வா.த.சா.ஆ.71 ன்படியான உத்தரவுகள் என்னை கட்டுப்படுத்தாது என்று குறிப்பிட்டு கூடுதல் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால், சரிதான். வா.த.சா.ஆ.67 மற்றும் வா.த.சா.ஆ.71 ன்படி உத்தரவுகளை மறைத்து வழக்கு சர்வே எண் 94/13C ஆனது பட்டா எண் 125 ல் இருந்து நீக்கப்பட்டதாக வா.த.சா.ஆ.56 ல் கண்டுள்ளது என்றால், சரிதான். பட்டா எண் 125 ல் இருந்து 2020 ம் ஆண்டிலேயே சர்வே எண் 94/13C நீக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு பின்னிட்டு நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.53 மற்றும் 54 கந்தாய ரசீதுகள் மற்றும் வா.த.சா.ஆ.57, 58 அடங்கல் கணக்குகளிலும் சர்வே எண் 94/13C நிலத்திற்கு கந்தாயம் கட்டியதாக கருத்தில் கொள்ள இயலாது என்று சொன்னால், சரியல்ல. மேற்படி வா.த.சா.ஆ.57 மற்றும் 58 ஆவணங்களில் சர்வே எண் 94/13C குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

4)வா.த.சா.ஆ.55 ஆவணத்தில் சர்வே எண் 94/13C ல் நாங்கள் கரும்பு பயிரிட்டதாகவோ அல்லது கரும்பு வெட்டும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவோ எந்த குறிப்பும் இல்லையென்றால், சரிதான். வா.த.சா.ஆ.63 ன்படி சங்ககிரி வருவாய் கோட்டாட்சியருக்கு எதிராக அளிக்கப்பட்ட புகார் மனுவானது வா.த.சா.ஆ.70 ஆவணப்படி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால், சரிதான். வா.த.சா.ஆ.64 ஆவணத்தில் Scanned by cam scanner என்று உள்ளது என்றால், சரிதான். வா.த.சா.ஆ.64 ஆவணத்தில் தரப்பினர்கள் கையொப்பமும், வழக்கறிஞர் கையொப்பமும் மேற்பகுதியில் இடப்பட்டதாக இல்லையென்றால், சரிதான். வா.த.சா.ஆ.65 ஆவணப்படியான ஆட்சேபனையை தாக்கல் செய்த ஜெகநாதன் என்பவர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு 100/2014 என்ற வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கை குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றாலும், அதனை ஒப்புக்

கொண்டால் அது இவ்வழக்கிற்கு எதிராக சென்றுவிடும் என்பதால், நான் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வா.த.சா.ஆ.66 ஆவணம் யாருக்கு யார் கொடுத்த Note file என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. Note file என்பது இறுதி உத்தரவு அல்ல என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. Note file என்பது துறை ரீதியான தகவல்கள் என்றாலும், ஆகையால் அதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் அளிக்கமுடியாது என்றாலும், நான் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளரிடமிருந்து சட்ட விரோதமாக பெற்றுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

5) வா.த.சா.ஆ.68 ன்படி வழக்கு சர்வே எண் 94/13C க்கான பட்டா ஆவணம் 1043 என்று உள்ளது என்றால், சரிதான். வா.த.சா.ஆ.53 மற்றும் 54 ரசீதுகளில் பட்டா எண் 1043 க்கு கந்தாயம் செலுத்தியதாக இல்லையென்று சொன்னால், சரிதான். நான் கூடுதல் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள நீதி பேராணை உத்தரவுகளை ஆவணங்களாக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் அது வழக்கிற்கு விரோதமாக சென்றுவிடும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. இன்றைய தேதியிலும் 4 ம் பிரதிவாதி எங்கள்மீது தாக்கல் செய்த நில அபகரிப்பு புகாருக்கான வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால், சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 01.15</u>

ஒப்பம்/தங்கவேல்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.